## தமிழ்நாட்டின் உரிமைகள் — நலன்களுக்காக

# நாடாளுமன்றத்தில் நாள்தோறும் குரல் எழுப்பும் கழக எம்.பி.க்கள்!

## தொடர் கேள்விக் கணைகளால் திணறுகிறது ஒன்றிய அரசு! (24.7.2025)



### சுதந்திர தினம் முதல்

# வணிக நோக்கமற்ற வாகனங்களுக்கு ‘டோல் கேட்’ வருடாந்திர பாஸ்!

### கனிமொழி கருணாநிதி எம்.பி. கேள்விக்கு ஒன்றிய அமைச்சர் நிதின் கட்கரி பதில்!

புதுடெல்லி, ஜூலை 25-

நாடு முழுவதும் தேசிய நெடுஞ்சாலை சுங்கச் சாவடிக ளில் (டோல் கேட்) வணிக நோக்கமற்ற வாகனம் வைத்தி ருப்பவர்களுக்கு வருடாந்திர பாஸ் வழங்கும் முறையை வரும் சுதந்திர தினம் முதல், அறிமுகப்படுத்துவதாக நாடா ளுமன்ற கழகக் குழுத் தலை வர் கனிமொழி கருணாநிதி கேள்விக்கு பதிலளிக்கையில் ஒன்றிய நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் நிதின் கட்கரி குறிப் பிட்டுள்ளார்.



திமுக துணைப் பொதுச் செயலாளரும் திமுக நாடாளு மன்றக் கழகக் குழுத் தலைவ ருமான கனிமொழி கருணா நிதி தேசிய நெடுஞ்சாலைகளில் இருக்கும் சுங்கச் சாவடிகள் பற் றிய கேள்விகளை மக்களவை யில் நேற்று எழுப்பினார்.

“ஒன்றிய நெடுஞ்சாலை துறையால் நாடு முழுவதும் இயக்கப்படும் சுங்கச் சாவடிகள் எனப்படுகிற டோல் கேட்டுக ளின் எண்ணிக்கை மாநில வாரியாக எவ்வளவு? குறிப்பாக தமிழ்நாட்டில் எத்தனை டோல் கேட்டுகள் இயங்குகின்றன?

தமிழ்நாடு உள்ளிட்ட பல் வேறு மாநிலங்களில் சலுகை ஒப்பந்த காலம் முடிந்த பின்ன ரும் கூட டோல்கேட்டுகளில் கட் டணம் வசூலிக்கப்படும் விதிமீ றல்கள் நடப்பதையும், இதனால் மக்கள் கடும் அதிருப் தியில் இருப்பதையும் ஒன்றிய அரசு அறிந்திருக்கிறதா?

அவ்வாறு ஒப்பந்த காலம் முடிந்த பின்னரும் கட்டண வசூ லில் ஈடுபட்டு வரும் டோல்கேட் டுகளின் எண்ணிக்கை எத் தனை? விதிகளை மீறி தொடர்ந்து கட்டணம் வசூலிக்க என்ன காரணம்?

இந்த சுங்கச்சாவடிகளைத் தணிக்கை செய்து, பொதுமக்க ளிடம் அதிக கட்டணம் வசூலித் ததற்காக ஒப்பந்ததாரர்களை பொறுப்பேற்கச் செய்ய அரசாங் கம் நடவடிக்கை எடுத்துள் ளதா? அப்படியானால், அதன் விவரங்கள் என்ன?

தமிழ்நாடு உள்ளிட்ட நாடு முழுதும் தினசரி பயணிகள் மற் றும் சிறு வணிகர்கள் மீதான சுங்கக் கட்டணச் சுமையை அரசு மறுபரிசீலனை செய்து, நிவாரணம் வழங்குவது குறித்து பரிசீலித்துள்ளதா, அப்ப டியானால், அதன் விவரங்கள் என்ன?” என்று கனிமொழி கரு ணாநிதி எம்.பி. கேள்விகளை அடுக்கியிருந்தார்.

இதற்கு ஒன்றிய நெடுஞ்சா லைத் துறை அமைச்சர் நிதின் ஜெய்ராம் கட்கரி அளித்த பதி லில்,

“தேசிய நெடுஞ்சாலைகள் மற்றும் தேசிய விரைவுச் சாலைகளில் செயல்படும் கட் டண டோல் கேட்டுகளின் எண் ணிக்கை நாடு முழுதும் ஜூன் 2025 நிலவரப்படி 1087 என்ற எண்ணிக்கையில் இருக்கிறது. இவற்றில் தமிழ்நாட்டில் சென்னை, மதுரை மண்டலங் களில் மொத்தம் 72 டோல் கேட் டுகள் அமைந்துள்ளன.

தேசிய நெடுஞ்சாலைகளில் உள்ள டோல் கேட்களில் பய னர் கட்டணம் வசூலிப்பது என் பது அத்திட்டத்தின் செலவை மீட்கும் நோக்கத்தில் அல்ல. தேசிய நெடுஞ்சாலைக் கட்டண விதிகளின்படி, தேசிய நெடுஞ் சாலையின் முடிக்கப்பட்ட பகுதி யைப் பயன்படுத்துவதற்கா கவே பயனர் கட்டணம் வசூலிக்கப்படுகிறது.

தேசிய நெடுஞ்சாலை கட் டண (விகிதங்கள் மற்றும் வசூல் நிர்ணயம்) விதிகள், 2008 இன் படி, ஒப்பந்தத்தில் நிர்ணயிக்கப்பட்ட கட்டணம் சலுகை காலம் முடியும் வரை வசூலிக்கப்படும். மேலும் சலுகை காலம் முடிந்த பிறகு, விதி 4 இன் துணை விதி (2) இன் கீழ் குறிப்பிட்ட கட்டணம் அரசின் தகுந்த அதிகாரியால் வசூலிக்கப்படும். தேசிய நெடுஞ்சாலை, பாலம், சுரங்கப் பாதை அல்லது புறவழிச்சாலைக்கான இந்த கட்டணங்கள் ஆண்டுதோறும் திருத்தியமைக்கப்படும்.

பொதுத் துறை நிதியில் நிறைவேற்றப்பட்ட திட்டத்தைப் பொறுத்தவரை, தேசிய நெடுஞ் சாலை, பாலம், சுரங்கப்பாதை அல்லது புறவழிச்சாலைகளில் இந்த விதிகளின்படி ஆண்டு தோறும் திருத்தியமைக்கப்பட்ட கட்டணம் தொடர்ந்து வசூலிக்க வேண்டும்.

BuildOperateTransfer ( BOT) எனப்படும் தனியாரால் கட்ட மைக்கப்பட்டு செயல்படுத்தப்ப டும் திட்டங்களைப் பொறுத்த வரை, சலுகை காலம் முடிந்த பிறகு டோல் கேட் அரசாங்கத்தி டம் ஒப்படைக்கப்படும்,. அதன் பிறகு பயனர் கட்டணம் அர சாங்க நிறுவனங்கள் மூலம் வசூலிக்கப்படும்.

பயனர் கட்டண வசூல் மூல மாக அரசாங்கத்தால் சேகரிக் கப்படும் வருவாய் இந்திய ஒருங்கிணைந்த நிதியில் (CFI) டெபாசிட் செய்யப்படுகிறது. இந் நிதி, பட்ஜெட் ஒதுக்கீடுகள் மூலம் தேசிய நெடுஞ்சாலைக ளின் மேம்பாட்டிற்கு பயன்படுத் தப்படுகிறது.

தேசிய நெடுஞ்சாலைகளில் உள்ள அனைத்து டோல் கேட்க ளும் இந்திய அரசின் அரசித ழில் வெளியிடப்பட்ட அந்தந்த பயனர் கட்டண அறிவிப்பின் படி, தேசிய நெடுஞ்சாலை கட்ட ணம் (விகிதங்கள் மற்றும் வசூல் நிர்ணயம்) விதிகள், 2008 மற்றும் ஒப்பந்தத்தின் விதிக ளின்படியே இயக்கப்படு கின்றன.

கட்டண வசூல் பதிவுகளை மதிப்பாய்வு செய்வதற்கும், ஒப் பந்த விதிகளின்படி கட்டணங் கள் வசூலிப்பதை உறுதி செய் வதற்கும், சுதந்திரமான தணிக்கைகள் நடத்தப்படுகின் றன.

நாடு முழுவதும் உள்ள தேசிய நெடுஞ்சாலைகளின் உள்ளூர் மற்றும் வழக்கமான பயனர்களுக்கு, NH கட்டண விதிகள், 2008 இன் படி, பய னர் கட்டணம் மற்றும் மாதாந் திர பாஸ்களில் தள்ளுபடி செய் வதற்கு விதிகளில் வழிவகை செய்யப்பட்டுள்ளன.

சர்வீஸ் ரோடு எனப்படும் சேவை சாலை இல்லாத நிலை யில், தேசிய நெடுஞ்சாலை, பாலம், பைபாஸ் அல்லது சுரங் கப்பாதை ஆகியவற்றின் பகுதி யைப் பயன்படுத்துவதற்கு வழக்கமான பயனர்களிடம் எந்த கட்டணமும் வசூலிக்கப்ப டுவதில்லை.

மேலும், நாடு முழுவதும் வரும் ஆகஸ்ட் 15, 2025 முதல், வணிக நோக்கமற்ற கார்கள், ஜீப்புகள் மற்றும் வேன்களுக்கான வருடாந்திர பாஸ் என்ற வசதியை அரசு அறிமுகப்படுத்துகிறது.

இதன்படி, வணிக நோக்க மற்ற வாகனம் வைத்திருக்கும், செயல்பாட்டுக்குரிய ஃபாஸ் டேக் பெற்றிருக்கும் ஒருவர், ரூபாய் 3,000 கட்டணம் செலுத்தி பாஸ் பெற தகுதியுடை யவர் ஆவார்.

இந்த பாஸ் ஆனது, ஒரு வருட காலம் அல்லது தேசிய நெடுஞ்சாலையில் உள்ள ஏதே னும் டோல் கேட் வழியாக 200 முறை செல்லுதல் இவற் றில் எது முந்தையதோ அது வரை செல்லுபடியாகும்” .

இவ்வாறு ஒன்றிய அமைச் சர் நிதின் கட்கரி பதிலளித்தார்.

### தமிழ்நாட்டில் புதுப்பிக்கத்தக்க

# எரிசக்தியைப் பயன்படுத்த எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன?

### மாநிலங்களவையில் – இரா.கிரிராஜன் கேள்வி!

புதுடெல்லி, ஜூலை 25-

தமிழ்நாட்டில் புதுப்பிக்கத் தக்க ஆற்றல் அதிகரிப்பதற்காக 50 மெகாவாட் நிறுவப்பட்ட திறன் கொண்ட சூரிய மற்றும் காற் றாலை மின் உற்பத்தி நிலையங் களை அமைப்பதற்கு அரசாங் கம் ஏதேனும் நிதி உதவியை வழங்கியுள்ளதா, இந்த வகை யில் கடந்த 5 ஆண்டுகளில் தமிழ்நாட்டில் நிறு வப்பட்ட திறன் கொண்ட சூரிய மின் நிலையங் கள் மற்றும் காற்றாலை மின் நிலையங்களின் விவரங்கள் என்ன, புதுப்பிக்கத்தக்க எரிசக்தி மின் உற்பத்தி நிலையங்களை நிறுவுவதில் ஒன்றிய அரசு, REC லிமிடெட், PFC லிமிடெட் போன்ற மின் நிதி நிறுவனங்கள் மூலம் வழங்கப்படும் மானியம் மற்றும் இந்த ஆலைகளின் தற்போதைய நிலை என்ன, தமிழ்நாட்டின் புதுப்பிக்கத்தக்க எரிசக்தியைப் பயன்படுத்த அரசு எடுத்த நடவ டிக்கைகள் மற்றும் 2030ஆம் ஆண்டிற்கு நிர்ணயிக்கப்பட்ட இலக்கு என்ன என்ற கேள்வி களை திமுக எம்.பி. இரா.கிரிரா ஜன் எழுப்பியிருந்தார்.



அதற்கு பதிலளித்த ஒன்றிய அரசின் புதிய மற்றும் புதுப்பிக்கத்தக்க எரிசக்தித் துறை இணை அமைச்சர் ஸ்ரீபாத் யெஸ்ஸோ நாயக், மத்திய பொதுத்துறை நிறுவனம் (CPSU) திட்டத்தின் கீழ், உள்நாட்டில் தயா ரிக்கப்பட்ட சூரிய ஒளி மின் களங் கள் மற்றும் தொகுதிகளைப் பயன்படுத்தும் அரசு உற்பத்தியா ளர்களால் செயல்படுத்தப்படும் மின் உறுபத்தி திட்டங்களுக்கு முதல் மற்றும் இரண்டாம் பகுதி களுக்காக ஒரு மெகாவாட்டுக்கு 70 லட்ச ரூபாய் வரையிலும், மூன்றாம் பகுதிக்கு ஒரு மெகா வாட்டிற்கு 55 லட்ச ரூபாய் வரை யிலும் நம்பகத்தன்மை இடை வெளி நிதி (VGF) வழங்கப் படுவதாக குறிப்பிட்டுள்ளார்.

இந்தத் திட்டத்தின் கீழ், NTPC லிமிடெட் தமிழ்நாட்டில் 230 மெகாவாட் சூரிய மின் திட்டத்தை செயல்படுத்தியுள்ளதல்தாகவும், இதற்காக ரூ.161 கோடியை இந் திய சூரிய சக்தி நிறுவனம் (SECI) மூலம் விடுவித்துள்ள தாகவும் ஒன்றிய இணை அமைச்சர் பதி லளித்துள்ளார். அதேசமயம், கட லோர காற்றாலை மின் திட்டங் களை நிறுவுவதற்கு நிதி உதவி வழங்குவதற்கான திட்டம் எது வும் தற்போதைக்கு இல்லை என் றும் விளக்கம் அளித்துள்ளார்.

புதுப்பிக்கத்தக்க எரிசக்தி திறன்களை நிறுவு வதற்காக மின்சார நிதி நிறுவனங்கள் கடன் களை வழங்குகின்றன என்றும் குறிப்பிட்டு பதிலளித்துள்ளார்.

தமிழ்நாடு உட்பட நாட்டில் புதுப்பிக்கத்தக்க எரிசக்தியை ஊக்குவிப்பதற்காக ஒன்றிய அர சின் 12 திட்டங்கள் மூலம் சலுகை கள் வழங்கப்பட்டு வருவதாகவும் இணை அமைச்சர் பதிலில் கூறப் பட்டுள்ளது.

தமிழ்நாடு உட்பட நாட்டில் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி உற்பத் தியைப் பயன்படுத்த எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் மூலம் கடல்க டந்த காற்றாலை மின் திட்டங்க ளுக்கான நம்பகத்தன்மை இடைவெளி நிதியளிப்பு திட்டத்தின் மூலம் குஜராத் மற் றும் தமிழ்நாடு கடற்கரையில் தலா 500 மெகாவாட் காற் றாலை திட்டங்களை நிறுவுதல் மற்றும் செயல்படுத்துதல் பணி கள் தொடங்கப்பட்டுள்ளதாக பட் டியலிட்டுள்ளார்.

தமிழ்நாடு கடற்கரையில் கடல்கடந்த காற்றாலை மின் திட் டங்க ளுக்குக்காக கடல் படு கையை குத்தகைக்கு எடுப்பதற் கான டெண்டரை இந்திய சூரிய ஆற்றல் கழகம் வெளியிட்டுள்ள தாகவும் ஒன்றிய அரசின் பதிலில் கூறப்பட்டுள்ளது.

தமிழ்நாட்டில் கடல் காற்றா லைப் பண்ணைகளுக்கான கடல்சார் இடஞ்சார்ந்த திட்டமிடல் மூலமாக 14 கடல் காற்றாலைத் தளங்களை அடையாளம் கண் டுள்ளதாகவும் ஒன்றிய இணை அமைச்சர் தனது பதிலில் கூற ப்பட்டுள்ளது.

# தமிழ்நாட்டில் விவசாயிகளுக்கு சமமான நீர் விநியோகிக்கப்படுமா?

### மக்களவையில் – ஆ.மணி கேள்வி!

புதுடெல்லி, ஜூலை 25-

தமிழ்நாட்டில் விவசாயி களிடையே சமமான நீர் விநியோகத்தை உறுதி செய்ய ஒன்றிய அரசு எடுத்துள்ள நடவ டிக்கைகள் என்ன? என்று மக்க ளவையில் தருமபுரி தொகுதி உறுப்பினர் வழக்கறிஞர். ஆ.மணி கேள்வி எழுப்பினார்.

தமிழ்நாட்டில் கடந்த மூன் றாண்டுகள் மற்றும் நடப்பு ஆண்டில் பெரிய மற்றும் சிறு பாசனத் திட்டங்களின் மூலம், குறிப்பாக தருமபுரி மாவட்டத் தில், பாசனத்தின் கீழ் கொண்டு



வரப்பட்ட மொத்த பரப்ப ளவு,மேற்கூறிய காலகட்டத்தில் தர்மபுரி மக்களவைத் தொகுதி யில் மத்திய மற்றும் மாநிலத் திட்டங்களின் கீழ் பாசன வசதி களை மேம்படுத்துவதற்காக ஒதுக்கப்பட்ட மற்றும் பயன்ப டுத்தப்பட்ட நிதி விவரங்கள் என்ன? நடப்பு நிதியாண்டில் தமிழ்நாட்டில் பாசன வரம்பை விரிவுபடுத்துவதற்கான இலக் குகளை ஒன்றிய அரசு நிர்ண யித்துள்ளதா?அப்படியானால், அதன் விவரங்கள் என்ன?தமிழ்நாட்டில் தற்போ துள்ள பாசன உள்கட்ட மைப்பை நவீனமயமாக்கவும் மேம்படுத்தவும்,பின் தங்கிய மாவட்டமான தருமபுரியில் விவசாயிகளிடையே சமமான நீர் விநியோகத்தை உறுதி செய்ய ஒன்றிய அரசு எடுத் துள்ள நடவடிக்கைகள் என்ன? என்று தருமபுரி நாடாளுமன்ற தொகுதி உறுப்பினர் வழக்கறி ஞர்.ஆ.மணி

ஜல் சக்தி மாநில அமைச்சர் ராஜ் பூஷன் சவுதாரியிடம் மக்க ளவையில் கேள்வி எழுப்பி உள்ளார்.

### இயற்கை பேரிடர்களை முன்னெச்சரிக்க தேவையான

# கட்டமைப்புகளை ஒன்றிய அரசு வலுப்படுத்துமா?

### மக்களவையில் டாக்டர் எஸ். ஜெகத்ரட்சகன் கேள்வி!

புதுடெல்லி, ஜூலை 25-

திராவிட முன்னேற்றக் கழ கத்தின் அரக்கோணம், நாடா ளுமன்ற உறுப்பினர் டாக்டர் எஸ். ஜெகத்ரட்சகன் 23 சூலை 2025 அன்று மக்களவையி;ல், இயற்கை பேரிடர்களை முன் னதாகவே அறியும் வகையி;ல், முன்னெச்சரிக்கை அமைப்பு களை வலுப்படுத்த, ஒன்றிய அரசு தேவையான கட்டமைப்பு களை ஏற்படுத்தியுள்ளளதா? என்றும் கடந்த ஐந்தாண்டுக ளுக்கான தரவுகளை உறுப்பி னர்களுக்கு தெரிவிக்க இய லுமா? என்றும் ஒன்றிய அரசின் மாண்புமிகு அரசின் புவி அறிவியல் அமைச்சக துறை இணையமைச்சர் டாக் டர் ஜிதேந்திர சிங் அவர்களிடம் விரிவான கேள்வியை எழுப்பி னார்.

ஒன்றிய அரசின் வானிலை ஆய்வுத் துறை இணையமைச் சர் அவர்கள் அளித்த பதில் வரு மாறு:

புயல், வெள்ளம், நிலநடுக்கம் போன்ற இயற்கைப் பேரிடர் களை முன்கூட்டியே அறியும் வகையிலும். பொது மக்க



ளுக்கு தேவையான அறிவிப்பு களை வழங்கும் வகையில் உரிய கட்டமைப்புகளை, ஒன் றிய அரசின் புவி அறிவியல் அமைச்சகம் ஏற்படுத்தியுள்ளது என்றும், அதிகமான மழைய ளவு, புயல் பாதிப்புகளால் பொது மக்களை பாதுகாக்க வைனிலை ஆய்வுத் துறை அவ்வப்போது முன்னெச்சரி க்கை அறிவிப்புகளை வழங்கி வருகின்றது என்றும், ரேடார் கள் மற்றும் செயற்கை கோள் கள் உதவியுடன் ஒவ்வொரு 10 நிமிடத்திற்கும் தேவையான தகவல்கள் பெறப்படுவதாக வும், பொது மக்களின் உயிரை யும், சொத்துகளையும் பாது காக்க தேவையான முயற்சி களை தேசிய பேரிடர் மேலாண்மை ஆணையம், நாடு முழுவதும் மேற்கொண்டு வருகின்றது என்று இணைய மைச்சர் தெரிவித்தார்.

மேலும், தேசிய நில அதிர்வு மையம் உதவியுடன், நாட்டின் எந்தெந்த பகுதிகள், எந்த அள வுக்கு நிலநடுக்கத்தால் பாதிக்க பட வாய்ப்பு உள்ளது என்றும், நில அதிர்வு எவ்வளவு தூரத்தில் மைய படுத்தப்படுகிறது என்ற விவரங்களும் அறிய முடிகிறது என்றாலும் அதை முன் கூட் டியே அறிவதற்கான தொழில் நுட்பம் இன்றும் வளரவில்லை என்றும் அமைச்சர் தெரிவித் தார்.

மத்திய நீர் ஆணையத்து டன் உதவியால் ஏழு நாட்கள் முன்னதாகவே நாட்டிலுள்ள 150 அணைக்கட்டுகளின் நீர் இருப்பு குறித்த விவரங்களை அறிவதன் மூலம், வெள்ளத்த டுப்பு நடவடிக்கைகள் மேற் கொள்ளப்பட்டு வருகின்றன என்றும், ஒரு நாள் முன்ன தாகவே, வானிலை, சமூக ஊட கங்கள் மூலமாக முன்னெச்ச ரிக்கை நடவடிக்கைகளை, பொது மக்களிடம் விழிப்பு ணர்வு செய்திகளாக வழங்கி வருகின்றன என்று கூறினார்.

வானிலை பாதிப்பு வரை படங்களின் உதவியுடனும், அர்கா மற்றும் அருனிகா போன்ற தலை சிறந்த கணிணி களின் உதவியுடனும், மோசம், மேக்தூத், தாமினி போன்ற சமூக ஊடக செயலிகளை வானிலை ஆய்வுத் துறை இயக்கி வருவதாகவும், இதன் மூலம் புயல், வெள்ளம், நிலந டுக்கம், அதிகமான மழையி னால் நிலச்சரிவு ஆகிய பேரிடர் களின் தாக்கத்தை குறைத்து பொதுமக்களுக்கு தேவையான முன்னெச்சரிக்கை நடவடிக் கைகளை தேசிய பேரிடர் மேலாண்மை ஆணையம் மேற்கொண்டு வருகிறது என்று ஒன்றிய அரசின் வானிலை ஆய்வுத் துறை இணையமைச் சர் டாக்டர் ஜிதேந்திர சிங் அவர் கள் மக்களவையில் அரக்கோ ணம் நாடாளுமன்ற உறுப்பினர் டாக்டர் எஸ். ஜெகத் ரட்சகன் எழுப்பிய கேள்விக்கு விரிவான பதிலை அளித்துள் ளார்.

### வேலூர் சுற்று வட்டாரப் பகுதிகளில் மின் உள்கட்டமைப்புத் துறைகளில்

# தனியார் நிறுவனங்களுக்கு வழங்கப்பட்டுள்ள நிதி எவ்வளவு?

### மக்களவையில் – டி.எம்.கதிர் ஆனந்த் கேள்வி!

புதுடெல்லி, ஜூலை 25-

வேலூர் மக்களவைத் தொகுதி தி.மு.க. உறுப்பினர் டி.எம்.கதிர் ஆனந்த், மின் உற் பத்தி மற்றும் மின் உள்கட்ட மைப்புத் துறையில் தனியார் நிறுவனங்களுக்கு வழங்கப்ப டும் கடனுதவிகள் தொடர்பாக ஒன்றிய அரசிடம் முழுமை யான வெளிப்படைத்தன் மையை வலியுறுத்தும் வகை யில் 24 ஜூலை 2025 அன்று மக்களவையில் முக்கியமான கேள்வியை எழுப்பியுள்ளார்.

இந்தக் கேள்வி ஒன்றிய அர சின் Rural Electrification Corpo ration Limited (REC) என்ற நிதி நிறுவனம் கடந்த சில ஆண்டுக ளில் தனியார் வரையறுக்கப் பட்ட நிறுவனங்களுக்கு வழங் கிய நிதிச் செயற்பாடுகள் குறித்து விளக்கம் பெறும் நோக்கத்து டன் அமைந்துள்ளது. நாட்டின் மின் வள மேம்பாட்டுக்காக அரசு சார்ந்த நிதி நிறுவனங்கள் பலருக்கும் கடனுதவிகள் அளித்து வருகின்றன. ஆனால் அந்த நிதி ஒதுக்கீடுகள் எந்த தரப்பினருக்குச் செல்கின்றன அந்தத் தரப்பில் தமிழ்நாட்டுக்கு உரிய பங்கு கிடைத்ததா என்று கேள்வி எழுப்பினார்.

டி.எம்.கதிர் ஆனந்த் மின் துறை அமைச்சரிடம் கேட் டுள்ள கேள்விகள் வருமாறு:-

ஆர்.இ.சி. நிறுவனம் மின் உற்பத்தி மின் பாதை கட்ட மைப்பு மற்றும் பிற உள்கட்ட மைப்புத் திட்டங்களுக்காக தனி யார் வரையறுக்கப்பட்ட நிறுவனங்களுக்கு கடன் உதவி வழங்குகிறதா என்பதைத் தெளி வுபடுத்த வேண்டும்.

கடந்த நான்கு ஆண்டுக ளில் எத்தனை தனியார் நிறுவ னங்களுக்கு ஆண்டு வாரியாக வும் நிறுவன வாரியாகவும் எவ்வளவு கடன்கள் வழங்கப் பட்டுள்ளன என்பது குறித்து முழுமையான பட்டியலை அர சிடம் கோரியுள்ளார்.

கடந்த மூன்று ஆண்டுக ளில் மீள்நிதி (refinance) என்ற முறையில் தனியார் நிறுவனங் களுக்கு வழங்கப்பட்ட நிதி உத விகள் குறித்து - எத்தனை நிறு வனங்களுக்கு எவ்வளவு நிதி வழங்கப்பட்டது என்பதை விவ ரிக்க கேட்டுள்ளார்.

தமிழ்நாட்டில் பதிவு செய்யப் பட்ட தனியார் நிறுவனங் களுக்கு REC கடன் உதவி வழங்கியுள்ளதா? வழங்கியி ருந்தால் அதன் முழுமையான விவரங்கள் வழங்கவில்லை என்றால் அதற்கான காரணங் களை அரசு விளக்க வேண்டும்.

இந்தக் கேள்வி தமிழ்நாட் டின் தொழில்துறையின் வளர்ச் சியையும் தொழில் முனை வோருக்கு வழங்கப்பட வேண்டிய நிதி ஆதரவையும் பிரதிபலிக்கிறது. தமிழ்நாடு முத லமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் தலைமையில் தர மான உள்கட்டமைப்புடன் கூடிய தொழில்துறை சூழலை உருவாக்கி வருகிறது.

வேலூர், இராணிப் பேட்டை, ஆம்பூர், குடியாத்தம் மற்றும் வேலூர் சுற்றுவட்டார ங்களில் பன்னாட்டுத் தரத்தில்



செயல்படும் பல தனியார் மின் துறை, இயந்திரத்துறை, கம்ப வெளி மற்றும் உள்கட்டமைப் புத் திட்டங்கள் மேற்கொள்ளப் பட்டு வருகின்றன. இத்தகைய திட்டங்களுக்கு ஒன்றிய அர சின் REC நிறுவனம் வழியாக நிதி உதவி தேவைப்படுகிறது. ஆனால், கடந்த ஆண்டுகளில் அந்த நிதி உதவிகள் தமிழ்நாட் டின் நிறுவனங்களுக்கு எவ்வ ளவு அளவில் கிடைத்தன என்ப தில் சந்தேகம் எழுந்துள்ளது.

தமிழ்நாட்டில் செயல்படும் தொழில்முனைவோருக்கு பங் கீடு குறைந்தால், அது மாநிலத் தின் வளர்ச்சியையும், வேலை வாய்ப்பு உருவாக்கத்தையும் பாதிக்கும். மத்திய அரசின் நிதி நிறுவனங்கள் மாநிலங்க ளுக்கு வழங்கும் நிதி ஆதரவு, திட்டமிடல் மற்றும் பங்கு சமத் துவம் கொண்டதாக இருக்க வேண்டும்.

மொத்தமாக இந்தக் கேள்வி, தமிழ்நாட்டின் நிதி நலன்கள் புறக்கணிக்கப்படு கிறதா என்பதாகும். மின் உற் பத்தி, பசுமை ஆற்றல் மற்றும் வளர்ச்சி திட்டங்களில் தமிழ் நாடு முன்னிலை வகிக்க வேண் டும் என்ற நோக்கத்தில், ஒன்றிய அரசு திட்டமிட்ட நிதியை சமமாக வழங்க வேண்டும்.

இவ்வாறு அவர் கேள்வி எழுப்பினார்.

இதற்கு ஒன்றிய அரசின் மின்துணை இணை அமைச் சர் ஸ்ரீபாத் நாயக் எழுத்துப்பூர் வமாக அளித்த பதில் வருமாறு:

கடந்த நான்கு ஆண்டுக ளில் REC லிமிடெட் நிதியளித்த தனியார் துறை திட்டங்களின் பட்டியல் இணைப்பு-1இல் வைக்கப்பட்டுள்ளது. அதன்படி கடந்த நான்கு ஆண்டுகளில் REC லிமிடெட் வாயிலாக நாட் டில் 125 தனியார் நிறுவனங்களுக்கு கடனுதவி வழங்கப்பட்டுள்ளது.

கடந்த மூன்று ஆண்டுக ளில் REC லிமிடெட் மறுநிதிய ளிப்பு (Refinancing) கடன் வழங் கிய தனியார் நிறுவனங்களின் பட்டியல் தரப்பட்டுள்ளது. அதன் படி கடந்த மூன்று ஆண்டுகளில் நாட்டில் 14 நிறுவனங்கள் கட னுதவி பெற்றுள்ளன.

REC லிமிடெட் கடன் வழங் கிய தமிழ்நாட்டில் பதிவுசெய்யப் பட்ட தனியார் லிமிடெட் நிறுவ னங்களின் பட்டியல் தரப்பட்டுள்ளது. இதன்படி தமிழ்நாட்டில் உள்ள 13 தனி யார் நிறுவனங்களுக்கு கடனு தவி வழங்கப்பட்டுள்ளது.

இவ்வாறு ஒன்றிய அமைச் சர் கூறினார்.

### மாநிலக் கல்வி உரிமைகளை

# பறிக்கும் வகையில் தேசிய கல்விக்கொள்கை உருவாக்கப்பட்டுள்ளதா?

### மாநிலங்களவையில் – மரு. கனிமொழி என்.வி.என். சோமு கேள்வி!

புதுடெல்லி, ஜூலை 25-

தேசிய கல்விக்கொள்கை (NEP) அரசியலமைப்பு உறுதி செய்துள்ள கூட்டாட்சித் தத்து வத்தை கேள்விக்குள்ளாக்கும் வகையிலும், கல்வி கொள்கை யில் மாநில அரசுகளை முடிவெ டுக்க விடாமல் மாநில சுயாட்சிக்கு எதிராகவும் அமைந் துள்ளதா?

அந்தந்த மாநிலங்களின் பண்பாடு மற்றும் வரலாற்று விழுமியங்களை முன்னிறுத் திய வரைவு, மொழிக் கொள்கை கள் மற்றும் பாடத்திட்ட வடிவ மைப்பில் மாநில அரசுகளின் அதிகாரங்களை புதிய கல்விக் கொள்கை மீறுகிறதா?

கூட்டாட்சித் தத்துவத்தை மீறும் வகையில் இக்கொள்கை யில் வரையறுக்கப்பட்டுள்ள அம் சங்களை கண்டறிந்து, ஒன்றிய மற்றும் மாநில அரசுகளுக்கிடை யேயான சமமான அதிகாரப்ப கிர்வை உறுதி செய்திட ஒன்றிய அரசு மேற்கொண்டுள்ள நடவ டிக்கைகள் என்ன? என்று மாநி லங்களவையில் தி.மு.க. எம். பி., மரு. கனிமொழி என்.வி. என். சோமு அவர்கள் கேள்வி எழுப்பி இருந்தார்.

இதற்கு ஒன்றிய கல்வித் துறை அமைச்சர் முனைவர் சுகந்தா மஜும்தார் அவர்கள் அளித்துள்ள பதில்:

கிராம பஞ்சாயத்துகள், ஊரக மற்றும் நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள், மாவட்ட , மாநில (ம) யூனியன் பிரதேச அரசுகள் மற்றும் நாடாளுமன்ற மக்கள் பிரதிநிதிகளுடன் கலந்தாலோசிக் கப்பட்ட பிறகே 29.07.2020 அன்று தேசிய கல்விக்கொள்கை வெளியிடப்பட்டது. கல்வி பொதுப் பட்டியலில் இருப்பதால் தரமான கல்வியை அளிப்பதில் முறையே ஒன்றிய மற்றும் மாநில அரசுக ளுக்கு சரிவிகித பொறுப்பு உள்ளது.

வழிகாட்டு நெறிமுறைகள் மற்றும் அமல்படுத்துவதற்கான பல்வேறு கட்ட காலவரையறை கள் உருவாக்கப்பட்டு முறை யான ஒருங்கிணைப்போடு செயல்படுத்திடும் வகையில் இக்கொள்கை வடிவமைக்கப் பட்டுள்ளது.

ஒன்றிய அளவிலான கல்வித் துறை சார்ந்த அமைச்சகங்கள் மற்றும் பிற துறைசார் முகமை கள், மாநில அளவிலான கல்வித் துறைகள், தேசிய தேர்வு முகமை, பள்ளி மற்றும் உயர் கல்விசார் ஒழுங்குமுறை அமைப்புகள், NCERT, SCERT மற்



றும் உயர்கல்வி ஆணையங் கள் ஆகியவற்றின் ஒருமித்த பங் களிப்போடு, குறிப்பாக ஒன்றிய மற்றும் மாநில அரசுகளின் கண் காணிப்பின்கீழ் அவற்றின் கூட் டுப் பங்களிப்போடு மட்டுமே இக்கொள்கை செயல்படுத்தப் படும்.

மொழி பன்மைத்துவம் மற் றும் கற்றல் (ம) கற்பித்தலின் தாக்கத்தை மேம்படுத்துதல் ஆகி யவை தேசிய கல்விக்கொள்கை யின் சாராம்சம். எனவே, அந் தந்த மாநில மாணவர்கள் தத்தமது தாய்மொழியில் பயில் வதால் கற்றல் தன்மை மேம்படு கிறது. புதுமையான சிந்தனை களை ஊக்குவிக்க மொழியை ஒரு தடையாக வைத்திராமல் செயல்பட இது உதவும்.

பொதுப்பட்டியலில் கல்வி உள்ளது என்பதை உணர்ந்த வடிவமாக அந்தந்த மாநிலங்க ளுக்கான பாடநூல் திட்டங்கள், கற்றல் முறைகள், பண்பாட்டு விழுமியங்களை உள்ளடக்கிய தாகவே தேசிய கல்விக் கொள்கை திகழும்.

கல்வியின் மீதான மாநில உரிமைகளை பறிப்பதற்கு தேசிய கல்விக்கொள்கை 2020 முயலவில்லை. ஒன்றிய மற்றும் மாநில அளவிலான முறையான கண்காணிப்பும் ஒருங்கி ணைந்த செயல்பாடும் மட்டுமே இன்றியமையாதது.

இக்கொள்கையை பற்றியும் விழிப்புணர்வை அளிக்கவும், மேலும் புதுமையான அம்சங்க ளைப் பற்றி ஆலோசிக்கவும் பயிற்சி வகுப்புகள், கருத்துப்ப கிர்வை உறுதி செய்யும் ஆலோச னைக்கூட்டங்கள் பல்வேறு கட் டங்களாக மாநில மற்றும் யூனியன் பிரதேச அரசுகள் மற் றும் அதுசார்ந்த கல்வி அமைப்பு களுடன் மேற்கொள்ளப்பட்டுவரு கின்றன.

இவ்வாறு ஒன்றிய கல்வித் துறை அமைச்சர் முனைவர் சுகந்தா மஜும்தார் பதிலளித்தார்.